# பாவண்ணன் படைப்புகளில் சமூகம்

## ஆய்வுச் சுருக்கம்

இலக்கியம் சமூகத்தைக் கருவாகக் கொண்டது வாழ்க்கைக்கு உதவும் இலக்கியம் மனித வாழ்வியலை விளக்குகின்றது. சமூக முன்னேற்றம் தொழில் பெருக்கம், தனிக்குடும்பம் போன்ற காரணங்களால் மனித வாழ்வில் மாறுதல் ஏற்பட்டது. மாற்றங்கள் சமூகத்தையும், குடும்பத்தையும் பாதித்தது. அவ்வகையில் பாவண்ணனில் படைப்புகள் புலப்படுத்தும் சமூகத்தை விளக்கும் நோக்கில் இவ் ஆய்வு அமைகிறது.

**ஆய்வுத்தலைப்பு**

பாவண்ணன் படைப்புகளில் சமூகம் என்பதே ஆய்வுத் தலைப்பாக அமைகிறது.

**ஆய்வுக்களம்**

தமிழ் இலக்கிய வகைகள் ஒன்றான இக்கால இலக்கியம் ஆய்வுக் களமாகிறது.

**ஆய்வின் எல்லை**

பாவண்ணனின் சிறுகதைத் தொகுதிகளும், குறும்புதினங்களும், புதினங்களும், கவிதைத் தொகுதிகளும் ஆய்வு எல்லைகளாக அமைகின்றன.

**ஆய்வு நோக்கம்**

பாவண்ணனின் சிறுகதைத் தொகுப்புகளைத் தனித்தனியாக ஆய்தல், நாவல்களை ஆய்தல், பெண்ணிய நோக்கில் ஆய்தல் எனப் பல வகையிலும் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இவற்றுள் பாவண்ணனின் சிறுகதை, புதினம், கவிதைகளைத் தொகுத்து ஆய்வதன் மூலம் சமூகச் சித்திரிப்பைக் காணமுடியும்.

Scanned by CamScanner

இவ்வகையில் பாவண்ணனின் சிறுகதை கவிதை, நாவல் இவற்றை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தை இனங்காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**கருதுகோள்**

பாவண்ணனின் படைப்புகள் சமூக நடப்புகளை உள்ளவாறே சித்திரிக்கின்றன, இலக்கியங்களை மறு வாசிப்பு செய்வதன் மூலம் புதிய கருத்தாக்கங்கள் உருப்பெறும் இயற்கையை பேனுவது இன்றைய அவசியத் தேவை என்பவை இவ்வாய்வின் கருதுகோளாகும்.

**முதன்மைச் சான்றாதாரங்கள்**

பாவண்ணனின் பதினாறு சிறுகதைத்தொகுதிகளும், இரண்டு குறும்புதினங்களும் மூன்று புதினங்களும் மூன்று கவிதைத்தொகுதிகளும் முதன்மைச் சான்றுகளாகும்.

**துணைமை ஆதாரங்கள்**

சமூகம் குறித்த கவிதைகள், கட்டுரைகைள், திறனாய்வு நூல்கள், அகராதிகள், கலைக்களஞ்சியம், நாளிதழ், வாரஇதழ் போன்றவை ஆய்விற்குரிய துணைமை ஆதாரங்களாக (Secondary Sources) அமைகின்றன.

**ஆய்வும் அணுகுமுறைகளும்**

இவ்வாய்வு பகுப்பாய்வு அணுகுமுறை (Analytical Approach), சமூகவியல் அணுகுமுறை (Sociological Approach), விளக்கமுறைத்திறனாய்வு, தொன்மத் திறனாய்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப் பெறுகின்றது.

Scanned by CamScanner

**ஆய்வு முன்னோடிகள்**

ப. பூங்காவனம் அவர்களின் ‘குடும்ப உறவுகள் ஒரு பெண் நிலை நோக்கு’, பா. பிரேமலதா, ‘பாவண்ணன் படைப்புகள் ஓர் ஆய்வு’ எனும் முனைவர் பட்ட ஆய்வேடுகளும் த.பூர்ணச்சந்திரா அவர்களின் பாவண்ணன் படைப்பில் பெண் என்ற இள முனைவர் பட்ட ஆய்வேடும் ஆய்வு முன்னோடிகளாகின்றன.

**ஆய்வுப் பகுப்பு**

முன்னுரை முடிவுரை நீங்கலாக இவ்வாய்வு, சமூகச் சித்திரிப்புகள், உறவுமுறைச் சிந்தனைகள், தொன்மச் சிந்தனைகள், புலம்பெயர்வு குறித்த சிந்தனைகள், சூழலியல் சிந்தனைகள் என ஐந்து இயல்களாகப் பகுக்கப்படுகின்றது.

**இயல் 1**

சமூகச் சித்திரிப்புகள் எனும் முதல் இயலில் சமுகத்தைப் பாதிக்கும் வறுமை, அரசியல், சாதி போன்ற காரணிகளால் எழும் அவலத்தை விளக்குவதாக அமைந்துள்ளது. மாறிவரும் சமூகச் சூழலில் முதியோர் புறந்தள்ளப்படுவதையும். தொழிலாளர்களின் பணியில் தடை ஏற்படுவதால் ஏற்படும் அவலத்தையும் விளக்குகின்றது. குழந்தைத் தொழிலாளர்கள், பணி மகளிர், விலைமகளிர், திருநங்கைகளின் இன்னலை விளக்குவதாய் அமைகின்றது.

**இயல் 2**

‘உறவு முறைகள்’ எனும் இரண்டாவது இயலில் மணஉறவு, குருதிசார் குடும்ப உறவுகளின் பிணைப்பும், விரிவும் விளக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் மாணவர் உறவின் மேன்மையும், நட்புறவின் விளைவுகளையும் விளக்குவதாய் அமைகின்றது.

Scanned by CamScanner

**இயல் 3**

'தொன்மவியல் சிந்தனைகள்' எனும் மூன்றாவது இயலில் தொன்மங்கள் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு காலம் காலமாக மாறிவரும் கருத்தாக்கங்கள் புலனாகின்றன. புனிதம், அதிகாரம் போன்றவை கேள்விக்குட்படுத்தப்படும் என்பதை ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது.

**இயல் 4**

புலம்பெயர்வு குறித்த சிந்தனைகள் எனும் நான்காவது இயலில் புலம்பெயர்வதற்கான காரணங்களும், புலம்பெயர் மண்ணில் தமிழன் அடையும் இன்னலையும், தமிழனின் உயிர் மலினப்பட்டுப் போனதையும், ஆசிரியர் புலப்படுத்தும் விதத்ததை ஆய்கிறது மேலும் உணர்வையும் உறவுகளையும், கருத்து வெளிப்பாட்டிற்கான மொழியையும் துறந்து வாழ்வதையும் இவ்வியல் புலப்படுத்துகிறது.

**இயல் 5**

சூழலைப் பேண வேண்டியதன் தேவையை வலியுறுத்துகின்றது இவ்வியல் இயற்கை வளங்களை மனிதன் பாழ்படுத்துவதோடு முற்றிலும் அழிப்பதையும், இயற்கையிடம் மனிதன் கொண்ட உறவுகளையும் விளக்குவதாகவும் அமைகின்றது.

**தொகுப்புரை**

ஐந்து இயல்களில் கண்ட முடிவுகளைத் தொகுத்துத் தருவதாகத் தொகுப்புரை அமைகின்றது தொடர்ந்து அதை அடுத்து துணைநூற் பட்டியல் மற்றும் பின் இணைப்புகள் இடம் பெறுகின்றன.

Scanned by CamScanner